www.padippakam.com



# கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ஆம் ஆண்டு வரை....

# ஈழத்தவர் வரலாறு

## -செங்கை ஆழியான்-

?7 ஆம் ஆண்டு 'நல்லைநகர் நூல்' எனும் வரலாற்று ஆய்வு லொன்றைப் பூபாலசிங்கம் த்தகசாலையினர் வளியிட்டனர். அந்த நூலின் முன்னுரையில் பின்வருமாறு றிப்பிட்டிருந்தேன். "...ந்தவேளினது அருள் ...க்கத்தைப் புலப்படுத்தும் வரலாறாக இந்நூலைக் ...ள்ளமுடியாது. ஏனெனில் ...க்திச் சுவை சொட்டக் கந்தவேளினது கருணை இந்நூலில் விபரிக்கப்படவில்லை. நல்லூர்க் கந்தசுவாமி கோயிலினது உண்மை வரலாற்றை ஆதாரங்களோடு புலப்படுத்தும் நூலாக இதனை ஆக்கியுள்ளேன். அதனால் மனதிற்குச் சங்கடந் தரும் கசப்பான சில உண்மைகளை ஜீரணிக்கவேண்டிய இடர்ப்பாட்டை இந்நூலைப் படிக்கும் பெரு மக்கள் அடைவார்களாயின் அது என் தவறன்று; வரலாற்றில் மறைக்கப்படக்கூடாத மெய்மையை முன் வைக்க நினைக்கும் வரலாற்று மாணவன் ஒருவனுக்குள்ள உரிமையைப் பூரணமாக எடுத்துக் கொண்டதன் விளைவே கசப்பான உண்மைகளை ஜீரணிக்கவேண்டிய சங்கடத்தை உங்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.''

ஈழத்தவர் 'வரலாறு' என்ற தொடருக்கும் இது சாலப் பொருந்தும் என நினைக்கிறேன். இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றில் தமிழ் ...ர்களதும் அவர்கள் சார்ந்த ...ம் முதன்மை சரிவரக் ... செய்யப்படவில்லை. ...ன சிந்தனைகள் ...ான வரலாற்றைத் ...டுத்தியுள்ளன. நடுநிலை தமது வரலாற்றைக் ...வண்டும் என்ற அவாவின் ...வ 'ஈழத்தவர் வரலாறு' என்ற இந்நூலாகும்.

...லங்கையின் வரலாறு என்பது ...ருக்கிடையிலான ஓயாத ...ாராட்ட விளைவு என்பது என் ...வின் முடிவாகும். இலங்கை ...ன்றி உலக நாடுகள் ...னத்தினதும் வரலாறும் ...வே. உலகில் நிகழும் ...ங்கள், போராட்டங்கள், ...கரவாதங்கள் ...த்திற்கும் அடிப்படைக் ...க இனவுணர்வே ...ங்கி நிற்பதைக் ...ம். ஒவ்வொரு இன ...கத்தமது ...ளங்களைப் பேண ...றார்கள். ஓரின அடையாளம் காணும் ...றிகாட்டிகளாக ...ளன: அவை, ...களது மொழி, ...க்களது கலாச்சாரம், மக்களது ஆள்புலம் ...னவாம். வர்க்கம், ... சமயம் என்பன ...னவுணர்வு மேலோங்கும் ... இரண்டாம் ...மாகிவிடுகின்றன. பல நூறு ...ள உதாரணங்களாகவும் ...ஆதாரமாகவும் ...ூத்த முடியும். ...ாக அமைந்த புலத்தின் அடுத்த கட்டப் ...ராட்டக் காரணிகளாக ...ம், சாதியம், சமயம் ...ன அமையும். மனுக்குலம் ...யாக வாழ்ந்ததாக ...றில்லை. அரசியல் என்பது ...காரத்தைக் கைப்பற்றல்; ...ற்காக மனுக்குலத்தின் ...தியை காவு கொடுக்க ...யல்வாதிகள் என்றும், ...ம் தயாராகவுள்ளனர். இது தான் வரலாறு.

இலங்கையின் ஆட்சியதிகாரம் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை சிங்கள மன்னர்களிடமும் தமிழ் மன்னர்களிடமும் மாறி மாறி இருந்து வந்துள்ளது என்பதனை கி.மு. 3 ஆம் நூற்றாண்டிற்கும் கி.மு. 1 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட 220 ஆண்டு கால அனுராதபுர அரசியல் வரலாற்றில், இக்கால எல்லைக்குள் 81 வருடங்களுக்கு மேல் ஆட்சி புரிந்துள்ளனர் என்பதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

கி.பி. 1505 இல் இலங்கைக்குப் போர்த்துக்கேயர் வந்தபோது இலங்கையில் ஐந்து இராச்சியங்கள் இருந்தன. யாழ்ப்பாண இராச்சியம் தமிழ் மன்னனாலும் கண்டி இராச்சியம் நாயக்கத் தமிழ் மன்னனாலும் ஆளப்பட்டன. கண்டி இராச்சியத்தின் நிர்வாகத்தின் கீழ் மட்டக்களப்புப் பிரதேசம் (அம்பாறை உட்பட) அடங்கியிருந்தது. கோட்டை, சீதவாக்கை, இரய்கம என்ற மூன்று மேற்குக்கரையோர இராச்சியங்கள் சிங்கள மன்னர்களின் ஆதிக்கத்தின் கீழ் விளங்கின. இலங்கையின் பெரும் பகுதியில் தமிழ் அரசாட்சி நிலவியது. ஒல்லாந்தர் காலத்தில் கண்டி இராச்சியம் தவிர்ந்த கரையோரங்கள் அனைத்தும் அவர்களால் நிர்வகிக்கப்பட்டன. மட்டக்களப்பு கரையோரமும் அவர்களால் கைப்பற்றப்பட்டிருந்தது. அவர்கள் வடபகுதியையும் கிழக்குப் பகுதியையும் தமிழர் வாழும் பிரதேசமாக ஒரு பிரிவாக்கி யாழ்ப்பாணப் பிரதேசம் எனப் பெயரிட்டு நிர்வகித்தனர். அவ்வாறு பிரிப்பது அவர்களுக்கு இலகுவாக இருந்தது. இவ்விரு பெரும் பகுதிகளிலும் தமிழ் மக்கள் தொடர்ந்து வாழ்ந்து வந்தமையும்



யாழ்ப்பாணப்பிரதேசம் எனப்பட்ட இப்பெரும் பகுதியையும் ஏனைய சிங்களப் பகுதிகளையும் பல மைல்கள் அகலமான காடு பிரித்திருந்தமையும் இதனைத் தனித்ததொரு பிரதேச அலகாக அவர்களைக் கருதவைத்தது. பிரித்தானியர்கள் இலங்கையை ஐந்து மாகாணப் பிரிவுகளாகப் பிரித்து ஆண்டனர். தெதுறு ஓயாவிற்கும் யான் ஓயாவிற்கும் வடபகுதி முழுவதும் வடமாகாணம் எனப்பட்டது. இது இன்றைய வடமாகாணப் பிரிவிலும் பார்க்க இரு மடங்கு பெரியது. யான் ஓயாவிலிருந்து கும்புக்கன் ஓயாவரையிலான கிழக்குப் பகுதி கிழக்கு மாகாணம் எனப்பட்டது. அவர்களின் மாகாணப்பிரிவு குடிசார் அடிப்படையிலும் புவியியற் பிரதேச அடிப்படையிலும் அமைந்த பிரிவுகளாகும். 1946 ஆம் ஆண்டளவில் இலங்கையை ஒன்பது மாகாணங்களாக வகுத்தபோது தமிழ் மக்கள் வாழ்கின்ற வடக்கு பிரதேசம் ஒரு மாகாணமாகவும், கிழக்குப் பிரதேம் ஒரு மாகாணமாகவும் பிரிக்கப்பட்டன. தமிழரின் தாயகப் பிரதேசங்கள் குடிசார் அடிப்படையில் நிர்வாகப் பிரிவுகளாக வகுக்கப்பட்டன. ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து இலங்கை விடுபட்டபோது அவர்கள் தமிழ் மக்களது நலனைப் பேணத்தவறி விட்டனர். போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றியபோது சிங்கள இராச்சியம், தமிழ் இராச்சியம் என இரு தெளிவான அரசியற் பிரிவுகள் இலங்கையில் இருந்தன. தமது நலனுக்காகப் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் பின்னர் வந்த ஆங்கிலேயரும் இலங்கையை ஒருங்கே வைத்து ஆண்டனர். ஆங்கிலேயர் தமது ஆதிக்கத்தை விடுவித்துக் கொண்டுகப்பலேறியபோது நிச்சயமாக முன்னர் இருந்தவாறு வகுத்துக் கொடுத்திருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாது 1948 இல் இந்த மண்ணிலிருந்து வெளியேறினர்.

இக்காலகட்டத்தின் பின்னர் இலங்கை அரசு திட்டமிட்ட விதத்தில் குடியேற்றங்களை நிறுவத் தொடங்கியது. வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கும் சிங்கள மாகாணங்களுக்கும் இடையிலான காட்டுப் பிரதேச எல்லைகளை அழித்துக் குடியேற்றத் திட்டங்களை உருவாக்கி அவற்றில் சிங்கள மக்களைக் குடியமர்த்துவதன் மூலம் தமிழரின் பாரம்பரிய பிரதேசத்தை அபகரிக்கும் விதத்தில் செயற்பட்டு வருகின்றது. இவ்வாறான குடியேற்றத் திட்டங்கள் ஆங்கிலேயர் ஆதிக்கம் நிலவி விலகிய காலத்திலிருந்து திட்டமிட்ட முறையில் செயற்பட்டு வருகின்றது. தமிழ் மொழி மீட்பில் கவனம் செலுத்திய தலைவர்கள், மண் மீட்பில் கவனம் செலுத்தத் தவறியதன் விளைவே இதுவாகும்.

'வரலாறு' என்பது இடையிடையே பிணைப்புக்கள் கழன்ற சங்கிலி போன்றது. அந்த நொய்தலான பிணைப்புக்களைக் கண்டறிந்து வரலாற்றுச் சங்கிலியை முழுமையாக்குகின்ற பணியில் வரலாற்றறிஞர்கள் அயராது உழைக்கின்றனர். இந்த தொடரில் அத்தகைய ஒரு காரியத்தை நான் செய்துள்ளேன். அதனால் வரலாறு என்ற நிலையைக் கடந்து வரலாற்று ஆய்வு என்ற ஒரு உயர்நிலைக்கு இத் தொடர் சென்றாலும் இலக்கியம் என்பது வாசிக்கப்படவேண்டும் என்ற கருத்தில் பிடிவாதமான விருப்புடையனவாகையால் இந்த தொடரையும் மக்கள் களைப்புச் சலிப்பின்றி வாசிக்கவேண்டும் என்ற அவாவினால் எளிமையாக விளக்கியுள்ளேன்.

'ஈழத்தவர் வரலாறு' என்ற இத் தொடரில் நான் நிறுவ முயன்றுள்ள கருதுகோள்கள் பின்வருவனவாம்:

1) இலங்கையின் வரலாறு என்பது இரண்டு இனங்களுக்கிடையிலான தொடர்பு போராட்டமாகவே இன்று வரை தொடர்ந்து வருகின்றது.

2) சிங்ஹல விஜயனும் அவனது தோழர்களும் இலங்கையின் கரையில் இறங்கியபோது இலங்கைத் தீவு ஓரளவு நாகரீகமடைந்துள்ள மக்கள் வசத்தில் இருந்தது.

3) ஈழத்தின் நாகரீக கர்த்தாக்கள் திராவிடரே. இன்றைய சிங்கள - தமிழ் மொழி பேசுவோர் அவர்களின் சந்ததியினரே.

4) பௌத்த மதம் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இந்து மதமே இந்நாட்டு மக்களின் மதமாக விளங்கியுள்ளது.

5) இந்துவாக முதலில் விளங்கிய தேவநம்பியதீசனின் மேலாதிக்கத்தை ஏற்ற உத்தரதேசக் குறுநில மன்னர்களால் பௌத்த தேவனம்பியதீசனின் வல்லாதிக்கத்தை ஏற்க முடியவில்லை. கிளர்தெழுந்தனர்.

6) வடவிலங்கையில் சிற்றரசர்களாக இருந்த சேனன், குத்திகன், எல்லாளன் போன்ற தமிழ் மன்னர்கள் பின்பு அனுராதபுர மன்னர்களாக மாறினர். இவர்கள் தமிழ்நாட்டிலிருந்து படை நடத்தியவர்களல்லர்.

7) கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலும், கி.பி. முதலாம் நூற்றாண்டிலும் வடவிலங்கையில் பெரும்பாலும் சிங்கள மன்னர்களது ஆதிக்கம் நிலவியது. கி.பி. 8 ஆம் நூற்றாண்டு வரை வடவிலங்கை சிங்கள ஆட்சியாளரின் ஆதிக்கத்தின் கீழ் அடிக்கடி உட்பட்டது.

8) சிங்கள ஆட்சியாளருக்கு எதிராக எழுந்த கிளர்ச்சிக்குத் தலைமை வகித்தவன் நாகதீப அரசின் முதல் மன்னனான உக்கிரசிங்கனாவான்.

9) பௌத்தம் நிலவிய நாகதீபத்தைக் கைவிட்டு சைவம் சிறப்புறக் கூடிய பெருநிலப்பகுதிக்குத் தலைநகர் மாறியது. இதனைச் செயற்படுத்திய உக்கிர சிங்கனின் பெயரால் உருவான புதிய தலைநகரே சிங்க(ன்) நகராகும்.

10) கலிங்கமான் உத்தரதேச மன்னனாகச் சிங்கை நகரில் முடிபுனைந்து, யாழ்ப்பாண நகரியைத் தனது அமைச்சன் புவனேகபாகு மூலம் கட்டுவித்து விஜயகாலிங்க ஆரியச் சக்கரவர்த்தியாக யாழ்ப்பாண இரசாதானியை நிறுவிக் கொண்டான்.

11) உத்தரதேசத்திலிருந்து பெருந்தொகையான பௌத்தர்களும் சிங்களவரும் தென்புலம் பெயர்ந்து விட்டமையால் புதிய யாழ்ப்பாண இராசதானிக்கு மக்கள் வளம் தேவைப்பட்டது. கி.பி. 1248 இல் தமிழகத்திலிருந்த மக்கள் இங்கு குடிபெயர்ந்தனர். அதன் விளைவாக புதிய குடியேற்றங்கள் தோன்றின.

12) 15 ஆம் நூற்றாண்டில் சப்புமல்குமரயா (செண்பகப் பெருமாள்) என்ற சிங்களத் தளபதியால் யாழ்ப்பாண நகர் பாழாகிவிட, அவன் மன்னனாக முடி சூடிய போது நல்லூரைத் தலைநகராக்கிக் கொண்டான்.

13) தமிழர் இராச்சியத்தில் வன்னிச் சிற்றரசுகளின் வளர்ச்சியும் சுதந்திரப் பேணலும் முக்கிய வரலாற்று நிகழ்வுகளை ஏற்படுத்தின.

14) யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் முதன்மை மறுக்கவியலாதது.

ஈழத்தவர் வரலாற்றுச் சங்கிலியின் நொய்தலான இழைகளை இணைக்கின்ற எனது செயற்பாட்டிற்கு இலங்கையின் மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த வரலாற்றாசிரியர்கள், தொல்லியலாய்வாளர்கள் கண்டறிந்த முடிவுகள் ஆதாரமாயின. முதலாம் தலைமுறை வரலாற்றறிஞர்களாகச் சுவாமி ஞானப்பிரகாசர், டானியல் ஜோண், ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை, முதலியார், செ.இராசநாயகம் ஆகியோர் உள்ளனர். இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்த வரலாற்றறிஞர்களாக பேராசிரியர் கா. இந்திரபாலா, பேராசிரியர் ச.பத்மநாதன், கலாநிதி எஸ்.அரசரத்தினம், திரு.வி.சிவசாமி, திரு.சி.எஸ். நவரத்தினம், திரு.எஸ்.நடேசன், பண்டிதர் பொ. செகந்நாதன் முதலியோர் விளங்குகின்றனர். இலங்கை வரலாற்றில் குறிப்பாகத் தமிழ் மக்களது வரலாற்றில் புதிய சிந்தனைகளையும் கண்டு பிடிப்புக்களையும் எடுத்துக் காட்டிய மூன்றாந்தலைமுறை வரலாற்றாளர்களாகப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், கலாநிதி செ.குணசிங்கம், கலாநிதி .பொ.ரகுபதி, திரு.ப. புஸ்பரத்தினம், திருமதி .ஜி.தனபாக்கியம், திரு.செ.கிருஸ்ணராசா ஆகியோரை நான் கருதுகிறேன். இவர்கள் துணிச்சலாகத் தமது கருத்துக்களைச் சரியாகவும் சுதந்திரமாகவும் முன் வைத்துள்ளனர். இந்த மூன்று தலைமுறை வரலாற்றறிஞர்களுக்கும் நன்றிகளை இத்தருணத்தில் கூறிக்கொள்கிறேன்.

(அடுத்த வாரம் கட்டுரைத் தொடருக்கு வருவோம்)

படிப்பகம்